டென்மார்க் தமிழர் பேரவை
**Dansk Tamilsk Forum**
**Denmark Tamils Forum**

www.dansktamilskforum.dk
forum@dansktamilskforum.dk

CVR.: 44669293

15.05.2024

தமிழீழ தேசியத்தலைவருக்கு விளக்கேற்றல் ஏன்? யாருக்காக?

உலகில் யாருக்கு அந்த தகுதி உண்டு, சூரியனை கைகளால் மறைத்துவிடலாமா!

உலகில் வாழும் பலகோடி தமிழ் மக்களின் மனதை வென்றவர், அந்த பல கோடி தமிழர்களின் உறவுக்கானவர் எம் தமிழீழ தேசியத்தலைவர். குடும்ப உறவை சொல்லி அவரை வீட்டுக்குள் அடைக்கமுடியாது.

தேசிய தலைவரின் அண்ணன் மதிப்புக்குரிய திரு. மனோகரன் அவர்கள் தன் மென் போக்கால் தலைவருக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தாது வாழ்ந்து வந்தவர். ஆனால் அவருடைய மகன் கார்த்திக் மாலதி கலைக்கூடத்திற்கும், தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் எதிராக கருத்துக்களை தெரிவித்துக்கொண்டும், செயற்பட்டுக்கொண்டும் இருந்தார், இருக்கின்றார்.

தற்போது மே 18 தேசியத்தலைவருக்கு அஞ்சலி செலுத்த முற்படுவது முற்றுமுழுதாக ரணிலின் நரிதந்திரத்திற்கு ஒத்துழைப்பதாகும். எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் சிங்கள மக்களுக்கு, பிரபாகரன் உயிருடன் இல்லை அவரின் குடும்பத்தாரே அவருக்கு அஞ்சலி செலுத்திவிட்டார்கள் என்ற தோற்றப்பாட்டை காட்டி தேர்தலை சந்திக்க தயாராகுகின்றார் ரணில். ரணிலின் சூழ்ச்சிவலையில் கார்த்திக் வீழ்த்தப்பட்டுள்ளதாகவே தமிழ் மக்கள் கருதுகின்றனர். இதற்கு மதிப்பிற்குரிய திரு.மனோகரன் அவர்களும் உடன்படுவது வருந்தத்தக்கது.

குமுதம் இதளில் 2010 மே மாதம் ஊடகவியளாளர் பா.ஏகலைவன் அவர்களுடனான நேர்காணலில் மனோகரன் அவர்கள் தேசியதலைவரின் இருப்பை மறுதலிக்கவில்லை. இந்த நேர்காணலை 2016 ம் ஆண்டு முள்ளிவாய்கால் முடிவல்ல என்ற புத்தகத்திலும் பா ஏகலைவன் வெளியிட்டிருந்தார்.

இப்படியிருக்க மனோகரன் அவர்கள் இப்போது தேசியதலைவருக்கு அஞ்சலி செலுத்த முனைவது தவிற்கபடவேண்டும் என்பதே பலகோடி உலகதமிழர்களின் விருப்பமும் உணர்வும் வேண்டுகோளுமாகும்.

2004 ஆண்டில் கருணாகுழுவின் சதிவலைப்பின்னலை ஒன்றுசேர்ந்து எதிர்த்தது போன்று இப்பொழுதும் இந்த சிங்களத்தின் சதிவலையை டென்மார்க் வாழ் தமிழ்மக்கள் ஒன்றுசேர்ந்து முறியடிக்கவேண்டும்.

தமிழரின் தாகம் தமிழீழதாயகம்

அரசியல்குழு

டென்மார்க் தமிழர் பேரவை

அ20240515மு1